**18.11.2025.**

**O.S.No.55/2003 & O.S.No.99/2016**

**வா.சா.3 : சடையன்**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) எனது சொந்த ஊர் ஏத்தாப்பூர். திருமங்கலம் டாக்டர் சுப்ரமணியம் என்பவரை எனக்கு தெரியும். டாக்டர் சுப்ரமணியம் மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், பாரதி நகரில் க.எண்.35/14 ஏல் வசித்து வருகிறார் என்றால் சரிதான். தற்போது அவர் உயிருடன் இல்லை என்றால் சரிதான். அவருடைய மனைவி டாக்டர் கோமதி மற்றும் மகள் டாக்டர். விசாலாட்சி உயிருடன் இருக்கிறார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கை யார் தாக்கல் செய்தது என்றால் டாக்டர்.சுப்ரமணி தான் தாக்கல் செய்தார். எந்த பரிகாரத்திற்காக இந்த வழக்கு போட்டுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியும். சக்ரவர்த்தி கிரயம் செய்து விட்டது சம்மந்தமாக வழக்கு போட்டுள்ளார். என்ன சொத்து என்ன சர்வே எண் என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்ன பரிகாரத்திற்காக வழக்கு போட்டுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனக்கு குறிப்பாக தெரியாது. எத்தனை ஐட்ட சொத்துகளுக்கு வழக்கு போட்டுள்ளார் என்ற விவரமும் எனக்கு தெரியாது. மேற்படி சொத்தின் நீள அகலங்கள் எனக்கு தெரியாது. எத்தனை செண்ட் என்று தெரியாது என்றால் சுமார் 15 செண்டிற்கு மேல் இருக்கும். எனக்கு தற்போது 79 வயதாகிறது.

2) நான் எனது நிருபண வாக்குமூலத்தில் என்ன விவரம் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். டாக்டர்.விஸ்வநாதன் சொத்து எப்போது வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதேபோல எப்போது தாவா சொத்தில் அங்கு வீடு கட்டினார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எப்போது தாவா சொத்தில் காம்பவுண்ட், பாத்ரூம் கட்டினார் என்றால் தெரியாது என்றால் பாத்ரூம் கட்டியது தெரியாது. காம்பவுண்ட் கட்டியது தெரியும். காம்பவுண்ட் கட்டி ஒரு சாவியை என்னிடம் கொடுத்தார். இந்த விவரத்தை நான் நிருபண வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை. என்னை சாட்சி சொல்ல டாக்டர் கோமதி தான் வந்து அழைத்தார்.

சுமார் 15 நாட்களுக்கு முன்பு சாட்சி சொல்வதற்கு அழைத்தார். இன்று நீதிமன்றம் வந்துள்ளாரா என்று நான் பார்க்கவில்லை. டாக்டர் கோமதி இந்த வழக்கில் என்ன சாட்சியம் அளித்துள்ளார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

3) டாக்டர் விசாலாட்சி இந்த வழக்கில் என்ன சாட்சியம் அளித்துள்ளார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். டாக்டர் கோமதி சாட்சியம் அளிக்க 10 வருடமாக சாட்சியம் அளிக்க வரமுடியாமல் போய்விட்ட நிலையில் இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிப்பதற்காக சுமார் 15 நாட்களுக்கு முன்பாக வந்து டாக்டர் கோமதி வந்து என்னை நேரில் வந்து  கேட்டார் என்று சொல்வது ஏற்றுக்கொள்ளும் படியாகவும் நம்பும் படியாகவும் இல்லை என்றால் சரியல்ல.  எனவே நான் சொல்லக்கூடிய சாட்சியம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை என்றால் சரியல்ல. சக்ரவர்த்தி குடும்பத்திற்கும் டாக்டர் குடும்பத்திற்கும் நான் பொதுவான ஆள் தான். விரோதம் இல்லை. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் சொல்ல அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான்.

4) எனக்கு படிக்க தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (நிருபண வாக்குமூலம்) உள்ள சங்கதிகள் என்னால் படிக்க இயலவில்லை.  கடந்த வாய்தா 05.11.2025 வரும்போதும் நான் நிருபண வாக்குமூலத்தை படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தின் மேற்கு புறம் கண்ணையன் ஆசாரி மனைவி பானுமதியின் சொத்துக்கு அருகில் நான் சைக்கிள் ரிப்பேர் மற்றும் வாடகை கடை வைத்து நடத்தி வருகிறேன்.  முதலில் வழக்கு சொத்திற்கு அருகிலும் தற்போது தேசிய நெடுஞ்சாலைக்கு வடக்கு பக்கமாக 1980ம் ஆண்டு கடையை மாற்றிவிட்டேன். பானுமதிக்கு முன்பு இருந்த வெங்கடபெருமாள்  வாங்கிய இடத்தில் நான் கடையை வைத்திருந்தேன் என்பதற்கு பஞ்சாயத்திற்கு ஏதும் வரி தாக்கல் செய்யவில்லை. தொழில் வரியும் தாக்கல் செய்யவில்லை. அப்போது வரி எதுவும் போடவில்லை. பஞ்சாயத்திற்கு கட்ட வேண்டிய வரியை நான் கட்ட தவறிவிட்டேன் என்பதால் நான் சொல்வதுபோல நான் அந்த இடத்தில் இருந்ததாக சொல்வதே

சந்தேகத்திற்கு இடமாக உள்ளது என்றால் சரியல்ல. அதனால் தான் நான் மேற்படி ஆவண்ஙகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5) பானுமதி கிரயம் வாங்கியதாக சொல்லும் பத்திரத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். என்ன சொத்து என்ன விவரம் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் பானுமதி அம்மாள் பத்திரத்தில் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தில் எந்த காலத்திலும் டாக்டர்.விஸ்வநாதன் அவருடைய மனைவி டாக்டர்.கோமதி டாக்டர்.விசாலாட்சி ஆகியோர் சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. அவர் அந்த இடத்தில் மருத்துவமனை வைத்து நடத்தி வந்தார். டாக்டர்.விஸ்வநாதன் அவருடைய மனைவி டாக்டர்.கோமதி டாக்டர்.விசாலாட்சி ஆகியோர் அந்த இடத்தில் மருத்துவமனை வைத்து நடத்தி வந்ததாக அவர்களே சாட்சியம் அளிக்காத நிலையில் நான் அவர்கள் அந்த இடத்தில் சுவாதீனத்தில் இருந்ததாக சொல்வது நம்பும் படியாக இல்லை என்றால் சரியல்ல. மேற்படி டாக்டர் எனக்கு மருத்துவர் பார்த்தார் என்பதற்கான மருத்துவ சீட்டு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6) சக்ரவர்த்தி குடும்பத்தில் பாகப்பிரிவினை செய்ததாக சொல்லும் ஆவணத்தை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். நான் அந்த ஆவணத்தில் சாட்சி போடவில்லை என்றால் சரிதான். நானும் அப்போது அங்கு இல்லை என்றால் சரிதான். இந்த நீதிமன்றத்தில் சுரேஷ், சதிஷ், மற்றும் கார்த்திக், ராஜீவ் ஆகியோரை என்பவரை தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் எனது கடைக்கு பக்கத்திலேயே கடை வைத்துள்ளனர். புத்திகவுண்டன்பாளையத்தை சேர்ந்த ஆறுமுகம் என்ற ராஜா மற்றும் மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம் மற்றும் நகரம், பாரதி நகரில் க.எண்.35/14 ஏ என்ற முகவரி வசித்து வரும் கிருஷ்ணன் மகன் சுப்ரமணியம் ஆத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழகககு எண். 49/2003 தாக்கல் செய்து அதற்கு தீர்ப்பு பெற்றுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். சுப்ரமணியம் என்பவர் தான் எனக்கு தெரிந்த டாக்டர் சுப்ரமணியம் என்றால் சரிதான்.

சக்ரவர்த்தி பெயரில் ஒரு வழக்கு இன்னும் நடைபெற்று வருகிறதா என்றால் தற்போது நிலுவையில் இல்லை. அந்த வழக்கு என்னவாயிற்று என்று எனக்கு தெரியாது. அது 2003 ல் போட்ட வழக்கு.

7) என் பேரிலும் ராமதாஸ், ரத்தினம் பேரிலும் வாரண்ட் போட்டு விட்டதாக சொன்னார்கள் ஆனால் எங்களை அழைத்து கொண்டு செல்லவில்லை. சக்ரவர்த்தி மகன் சுரேஷ், டாக்டர் சுப்ரமணி, ரத்தினம், சன்னாசி மகன் மாணிக்கம், சுந்தரன் மகன் ராமதாஸ், அருணாசலம் மகன் சடையன், ராமசாமி மகன் ராஜேந்திரன், ஆகியோர் பெயரில் ஏத்தாப்பூர் காவல் நிலையத்தில் நீதிமன்ற உத்தரவின் பேரில் குற்ற எண்.126/2004 சட்ட பிரிவு 147,148,353,374,325,506(2) இ.த.ச படி வழக்கு தாக்கல் செய்தனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 20.04.2003 ல் டாக்டருடன் நாங்கள் அனைவரும் உறுதுணையாக இருந்து சுரேஷ் போன்றோரை அடித்து காலி செய்தோம் என்றால் நான் கடையில் இருந்தேன். பிரச்சனை நடைபெற்றது. நான் பார்த்துக்கொண்டு இருந்தேன். நான் மேற்படி தகராறில் நான் வேடிக்கை பார்த்தேன் என்று சொல்வது தவறு என்றும் நான் டாக்டர்.சுப்ரமணி மற்றவர்களுடன் சேர்ந்து தகராறு செய்தேன் என்றால் சரியல்ல. மேற்படி பிரச்சனை பற்றி எனக்கு நன்றாக தெரியும் என்றும் சக்ரவர்த்தி குடும்பத்திற்கும் எனக்கும் சுமார் 30 வருடமாக தகராறு உள்ளது என்றால் சரியல்ல. அதனால் தான் நான் விரோதத்தை மனதில் வைத்து கொண்டு யாரும் சாட்சி சொல்ல அழைக்காமலேயே என்னை சாட்சி சொல்ல அழைத்ததாக சொல்லி நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்து சக்ரவர்த்தி குடும்பம் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் கேஎஸ்ஆர் என்ற ஏத்தாப்பூர் காரர் தான் கடை வைத்து அனுபவித்து வருகிறார். கேஎஸ்ஆர் என்ற ஏத்தாப்பூர் காரருக்கும் மேற்படி தாவா சொத்தில் கடை வைத்து நடத்தி வரவில்லை என்றால் சரியல்ல. அவருக்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. சக்ரவர்த்தி குடும்பத்திற்கும் டாக்டர் குடும்பத்திற்கும் பிரச்சனை ஏற்பட நான் தான் காரணம் என்றால் சரியல்ல. டாக்டர்

குடும்பத்திற்கு இல்லாத சொத்தை இருப்பதாக சொல்லி டாக்டர் குடும்பத்தையும் பிரதிவாதி சக்ரவர்த்தி குடும்பத்தையும் நான் ஏமாற்றி வருகிறேன் என்றால் சரியல்ல. டாக்டர் குடும்பத்தின் பெயரில் பட்டா சிட்டா அடங்கல் முதலியவற்றை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். ஊரில் வேறு யாரும் சாட்சி சொல்ல வரமாட்டார்கள் என்று நினைத்துகொண்டு எனக்கும் சக்ரவர்த்தி குடும்பதிற்கும் உள்ள முன் விரோதத்தை பயன்படுத்தி துர்லாபம் அடைய நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றும் என்னுடைய சாட்சி ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.11.18 17:39:21 +0530

**Subordinate Judge, Attur.**